DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.
**O.S. No. 98/2025**

Deposition of Witness : P.W. 2

Name – **திரு. சிவபாண்டியன்** Father's Name - **திரு.**

Village - Taluk-
Caste - Calling -
Religion - Age-

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **19.02.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை** –

1. இந்த வழக்கிலுள்ள வாதி ரஷியழகன், பிரதிவாதி செல்வி ஆகிய இருவரையும் எனக்கு தெரியும். நானும், அவர்களும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் தான். பிரதிவாதி செல்வி எங்கள் ஊரில் ஹோட்டல் கடை நடத்தி வருகிறார். கடந்த 10.10.2024-ம் தேதியன்று வாதியிடம் பிரதிவாதி ரூ.30 லட்சம் கடன் வாங்கினார். எதற்காக அந்த பணம் கடன் வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. வாதி வீட்டில் வைத்து மேற்கண்ட பணம் பணம் தரப்பட்டது. காலை 12.00 மணியளவில் மேற்கண்ட பணம் தரப்பட்டது.

2. அப்போது வாதியும், நானும் மற்றொரு சாட்சியான பாண்டியன், பத்திரம் எழுதிய முத்துராஜ், பணம் வாங்கிய செல்வி மற்றும் ராஜா ஆகியோர் இருந்தார்கள். செல்விதான் 60 கட்டுகளான 500 ரூபாய் நோட்டுகளை வாங்கி எண்ணி எடுத்துக் கொண்டார். நூத்துக்கு மாதம் ஒரு ரூபாய் வட்டி என்று பேசி இந்த கடன் கொடுக்கப்பட்டது. தொழிலுக்காக பணம் வாங்கப்பட்டது. மூன்று புரோநோட்டுகளாக இந்த கடன் எழுதப்பட்டது. எவ்வளவு ரூபாய்க்கு எழுதப்பட்டது என்றால் ஒவ்வொரு புரோநோட்டும் ரூ.10 லட்சத்திற்கு எழுதப்பட்டது. அந்த புரோநோட்டில் செல்வி கையெழுத்து போட்டார்.

3. நான் அந்த புரோநோட்டில் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டேன். இரண்டாவது சாட்சியாக பாண்டியன் என்பவர் கையெழுத்து போட்டார். வாதி தான் எங்களை கையெழுத்து போடுவதற்கு அழைத்து வந்தார். நான் விவசாயத் தொழில் செய்து வருகிறேன். புரோநோட்டு எழுதிய சாட்சியான முத்துராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். புரோநோட் எழுதி கையொப்பம் செய்தவர் என்று சொல்லி உள்ளார். புரோநோட்டு தவிர இடப்பத்திரம் ஒன்று தரப்பட்டது. அந்த கடன் தொகையை திரும்பி செலுத்தவில்லை என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் பணம் கொடுக்கும்போது உடன் இருந்தேன் என்பதை சாட்சியாக சொல்ல வந்துள்ளேன்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.19 16:03:46 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.